# வேதாகமத்திலுள்ள ஞானஸ்நானம்

> *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28:18-20).*

விசுவாசத்தின் பயன்கள் யாவும் ஞானஸ்நானத்துடன் இணைவு பட்டுள்ள அளவுக்கு வேதாகமத்தில் விசுவாசமும் ஞானஸ்நானமும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தினால், ஞானஸ்நானம் விசுவாசத்தினின்று பிரிக்கப்பட முடியாது - அல்லது விசுவாசமும் ஞானஸ்நானத்திலிருந்து பிரிக்கப்பட முடியாது. கிறிஸ்தவராகும் செயல்முறையில் இவையிரண்டும் ஒன்று மற்றொன்றின்றிக் கலந்தாய்வு செய்யப்பட முடியாது, மற்றும் இவைகளின் பாகமாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை இணைவு படுத்த முடியாது.

புதிய எருசலேம் வேதாகமத்தின் முன்குறிப்பொன்று பின்வருமாறு எடுத்துரைக்கின்றது:

> ஞானஸ்நானம் என்பது விசுவாசத்திற்கு எதிரிடையாய்ச் செல்வ தில்லை, ஆனால் விசுவாசத்துடன் இணைந்து செல்கின்றது …, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்குப் பவுல் ஒரே விதமான செயல்விளைவுகளையே குறிப்பிட்டுள்ளார் … பாவி தண்ணீரினுள் முழுக்காட்டப்படுகின்றார் … மற்றும் இவ்விதமாக கிறிஸ்துவுடன் "அடக்கம்" பண்ணப்படுகின்றார் … [கலா. *3:26* மற்றும் கொலோ. *2:12* ஆகியவற்றைக் காணவும்][1]

வேதாகமக் கண்ணோக்கிலிருந்து ஞானஸ்நானத்தைப் பற்றிய கவனம்

*நிறைந்த பாடமொன்று, விசுவாசத்துடன் ஞானஸ்நானத்திற்குள்ள உறவு முறையின் காரணமாக அதன் இன்றியமையாமையை உறுதிப் படுத்துகின்றது.*

*வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கையில்,* NASB*யின் தற்போதைய பதிப்பை நாம் பயன்படுத்துவோம். மற்ற மொழி பெயர்ப்புகள் பின்வரும் சுருக்கக் குறிப்புகளுடன் குறிப்பிடப்படுகின்றன:*

KJV - King James Version
NIV - New International Version
NKJV - New King James Version

*இந்தப் படிப்பில் உட்புகும் ஒவ்வொருவரும் அதைத் திறந்த மனதுடனும் திறந்த புத்தகமாகிய வேதாகமத்துடனும் செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். இது ஞானஸ்நானத்தைப் பற்றிய ஊக்கம் நிறைந்த படிப்பிற்கும், அதைப் பற்றிய வேதாகமத்தின் போதனைக்கும் வழிநடத்தும்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு நான், வேதாகமத்தைப் படித்துச் சில கேள்விகளைக் கொண்டிருந்த ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். அவர்கள் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கேட்டார்கள், மற்றும் நான் பாவமன்னிப்புக்கு நாம் ஞானஸ்நானம் பெறுதல் அவசியம் என்று அவர்களிடம் கூறினேன். அவர்கள் என்னை நம்பாத பொழுது நான் அவர்களிடம் அப். 2:38 வாசிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அப்பெண்மணி தனது வேதாகமத்தில் அப்படிப்பட்ட பகுதியொன்றும் இல்லையென்று கூறினார். நான் அப்பெண்மணியின் வேதாகமத்தை எடுத்து, அதைத் திறந்தேன். அப். 2:38 அதில் இல்லாதிருந்தது - அப்பெண்மணி அவ்வசனத்தைத் தனது வேதாகமத்திலிருந்து உண்மையிலேயே வெட்டி எடுத்து விட்டிருந்தார்!*

*பாவமன்னிப்புக்கு ஞானஸ்நானத்தின் அவசியத்தை மதக்குழுக்களில் உள்ளவர்கள் எல்லாருமே மறுக்கின்றனர். சிலர் ஞானஸ்நானப்படுத்துவதே இல்லை. புரொட்டஸ்டன்டு குழுவினர் பலர் ஞானஸ்நானத்தை நடைமுறைப் படுத்தினாலும் அதன் மீது பெரிய முக்கியத்துவம் எதையும் வைப்பதில்லை. அப்படிப்பட்ட குழுவினருடன் பழக்கப்பட்டவர்கள், வேதாகமம் ஞானஸ்நானத்தைப் பற்றி அதிகம் கூறுகின்றதா அல்லது ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம் எதையும் தருகின்றதா என்று வியப்படைகின்றனர். இவ்விதமாக, நாம் நமது படிப்பைத் தொடங்கு கையில், முதலில் நாம் வேதாகமத்தில் உள்ள "ஞானஸ்நானம்" மற்றும் "ஞானஸ்நானப்படுத்துதல்" என்ற வார்த்தைகளை ஆராய்வோம். இந்த வார்த்தைகளுக்கு வேதாகமத்தில் தரப்பட்டுள்ள முக்கியத்துவம் என்ன?*

## வேதாகமத்தில் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை வரும் இடங்கள்

*ஞானஸ்நானம் என்பது பழைய ஏற்பாட்டுக் கருத்தாக இருப்பதில்லை; இது மோசேயின் பிரமாணத்தில் போதிக்கப்படவில்லை அல்லது*

வரலாற்றின் அந்தக் காலத்தின்போது குறிப்பிடப்படவில்லை. புதிய ஏற்பாட்டுக்கு வரும் வரையிலும் நாம் ஞானஸ்நானம் பற்றிய போதனையைக் கண்டறிவதில்லை. ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்த தேவன் முழுக்காட்டிக் கொண்டிருந்த யோவான் ஸ்நானனைப் பயன்படுத்தினார்.

"Baptize" மற்றும் "baptism" என்ற வார்த்தைகள் கிரேக்க வார்த்தைகளின் ஒலியாக்கங்களாய் உள்ளன. *"Baptizo"* என்ற வினைச் சொல்லானது எழுபத்தி ஒன்பது முறையும், *"baptisma"* என்ற பெயர்ச் சொல்லானது இருபத்தியிரண்டு முறையும் - ஆக மொத்தம் 101 முறைகள் (வேதாகமத்தில்) வருகின்றது. ஞானஸ்நானம் கொடுத்தவர் என்ற முறையில் யோவானைக் குறிக்க *baptistes* என்ற வார்த்தை பதினான்கு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. யோவான், "யோவான் ஸ்நானன்" என்று தகுதியற்ற வகையில் அழைக்கப்படுகின்றார். அவர் "ஸ்நானன்" (Baptist) அல்ல ஆனால் அதற்குப் பதில் அவர் "முழுக்காட்டுபவராக" (ஸ்நானப்படுத்துபவராக) - *baptistes* என்ற வார்த்தையின் அர்த்தப்படி முழுக்காட்டுபவராக இருந்தார்.

ஞானஸ்நானம் பற்றி மாறுபட்ட ஏழு சந்தர்ப்பப் பொருள்களில் புதிய ஏற்பாடு பேசுகின்றது:

1. மேகத்திலும் கடலிலும் இஸ்ரவேலரின் ஞானஸ்நானம் - ஒரே ஒருமுறை (1 கொரி. 10:1, 2).

2. அக்கினி ஞானஸ்நானம் (மத். 3:11; லூக். 3:16) - இருமுறை.

3. இயேசுவால் சகிக்கப்பட்ட துன்பங்களின் (ஞான)ஸ்நானம் (மாற்கு 10:38, 39) ஏழுமுறை.

4. பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் (மத். 3:11) - ஆறுமுறை. (இந்த மொத்த எண்ணிக்கையானது சுவிசேஷங்களில் உள்ள இணைக் கூற்றுகள் [மாற். 1:8; லூக். 3:16; யோவா. 1:33] மற்றும் இயேசுவின் கூற்றுக்களில் உள்ள மேற்கோள்கள் [அப். 1:5; 11:16] ஆகியவற்றின் காரணமாக மூன்றாகக் குறைக்கப்பட முடியும்.)

5. யோவான் கொடுத்து வந்த தண்ணீர் ஞானஸ்நானம் (மாற். 1:4, 5) - முப்பத்தி ஒன்பது முறை. யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது பற்றிய ஆறு குறிப்புகள் உட்பட இணைச் சுவிசேஷங்களில் இது மீண்டும் கூறப்படுவதன் காரணமாக, இந்த எண்ணிக்கையானது பத்தாகக் குறைக்கப்பட முடியும்.

6. இயேசுவின் ஊழியத்தின் போது அவரால் போதிக்கப்பட்டதும், அவருடைய சீஷர்களால் நடைமுறைப்படுத்தப்படுவதுமான தண்ணீர் ஞானஸ்நானம் - நான்கு முறை (யோவா. 3:22, 26; 4:1, 2). (இது யோவான் அல்லது இயேசுவின் சீஷர்களாகும்படி நாடியவர்களுக்கு யோவானின் ஞானஸ்நானத்திற்கான அதே நோக்கத்திற்கானதாக [மாற். 1:4; லூக். 3:3] இருக்கலாம்.)

7. புதிய உடன்படிக்கையுடன் தொடர்புடையதாகப் போதிக்கப் பட்ட தண்ணீர் ஞானஸ்நானம் (மத். 28:19) - முப்பத்தி நான்குமுறை.

எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானம்" உண்டு என்று போதிப்பவர்கள் அப்படிப்பட்ட சொல்வழக்கு

வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிராதது குறித்துத் திகைப்படையலாம். வேதாகமம் "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்" என்றோ அல்லது "தண்ணீர் ஞானஸ்நானம்" என்றோ கூறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, பரிசுத்த ஆவியானவருக்''குள்'' அல்லது பரிசுத்த ஆவியானவ''ரில்'' ஞானஸ்நானம் (மத். 3:11) மற்றும் "யோர்தான் நதியில்" ஞானஸ்நானம் (மத். 3:6) என்று குறிப்பிடுகின்றது. பரிசுத்த ஆவியானவரில் இயேசு ஞானஸ்நானப்படுத்துவார் என்று யோவான் கூறினார். ஆவியானவர் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை (இயேசு ஞானஸ்நானம் கொடுத்தார்) ஆனால் அவருக்குள் அல்லது அவரில் மக்கள் ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர்.

## சொற்றொடர்கள் வருமிடங்கள் ஒப்பிடப்பட்டன

பின்வரும் வார்த்தை ஒப்பீடுகள் யாவையும் அவைகள் தற்போதைய NASBயில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வழிமுறையின் அடிப்படையில் அமைந்துள்ளன.

தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கும் பொழுது புதிய ஏற்பாட்டில் "baptize" (ஞானஸ்நானப்படுத்துதல்) மற்றும் "baptism" (ஞானஸ்நானம்) என்ற சொற்கள் எழுபத்தேழு முறைகள் வருதலானது ஞானஸ்நானம் சில முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், இவ்வார்த்தைகள் வரும் எண்ணிக்கையானது தேவனுடனான நமது உறவுமுறைக்கு ஞானஸ்நானம் கொண்டுள்ள தனிச்சிறப்பைக் காண்பிக்க வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதில்லை. இவ்வார்த்தைகள் வரும் எண்ணிக்கையானது முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றதே தவிர வேறு எதையும் நமக்குக் கூறுவதில்லை. ஞானஸ்நானம் என்ற வார்த்தை தோன்றுகின்ற எந்த வசனப் பகுதியும், ஏற்கனவே இரட்சிக்கப் பட்டிருந்த மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று சுட்டிக் காட்டுவதில்லை என்ற உண்மையே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ''பாவமன்னிப்பு'' மற்றும் ''இரட்சிப்பு'' போன்ற கருத்துக்கள் எப்பொழுதுமே ஞானஸ்நானத்திற்குப் பின்புதான் - ஒரு பொழுதும் அதற்கு முன்பு அல்ல - வருகின்றன (மாற். 1:4; 16:16; லூக். 3:3; அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13; 1 பேது. 3:21).

''அறிக்கையிடு'' (கிரேக்கம்: homologeo) என்பது இருபத்தியாறு முறைகளும், மற்றும் "அறிக்கை" (கிரேக்கம்: homologia) என்பது ஆறு முறைகளும் வருகின்றன. தேவனுடன் விஷயங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக அறிக்கையிடுதலைக் குறிக்க இந்த வார்த்தை வடிவங்கள் ஏறக்குறைய ஏழுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

''மனம் திரும்பு'' (கிரேக்கம்: metanoeo) என்பது முப்பத்தி நான்கு முறைகளும், மற்றும் "மனந்திரும்புதல்" (கிரேக்கம்: metanoia) என்பது இருபத்தியிரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை வடிவங்கள், பழைய பிரமாணத்தின் கீழிருந்த யூதர்களைக் குறிக்க ஒன்பது முறையும், யோவான் ஞானஸ்நானத்திற்கு அவசியமானதாக ஏழு முறைகளும், இராஜ்யம் சமீபித்திருந்ததால் தேவையானது என்று குறிக்க

நான்கு முறைகளும், ஏற்கனவே கிறிஸ்தவர்களாய் இருக்கின்றவர்கள் தேவனுடன் சரியாவதற்கு அவசியமான அடிவைப்பு என்று குறிக்க பதினைந்து முறைகளும் மற்றும் இழந்துபோகப்பட்டிருப்பவர்களின் (கிறிஸ்தவரல்லாதவர்களின்) பதில்செயலைக் குறிக்க இருபத்தியோரு முறைகளும் வருகின்றன.

"நம்புதல்" (கிரேக்க வினைச் சொல்: *pisteuo*) என்பது 240 முறைகளும், "விசுவாசம்" (கிரேக்கப் பெயர்ச் சொல்: *pistis*) 243 முறைகளும் காணப் படுகின்றன. இவைகள் வேதாகமத்தில் உள்ள திறவுகோல் வார்த்தை களாகும்: கிறிஸ்தவம் என்பது தேவன்மீதும், இயேசுவின்மீதும், தேவனு டைய செயல்கள்மீதும் மற்றும் அவருடைய வசனத்தின்மீதும் உள்ள விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ''விசுவாசம்'' (கிரேக்கம்: *pistis*) மற்றும் "நம்புதல்" (கிரேக்கம்: *pisteuo*) என்பவை இரு மாறுபட்ட கருத்துக்கள் அல்ல; "நம்புதல்" என்பது ஒரு வினைச் சொல் (ஒரு செயலைக் குறிப்பிடுதல்) என்றிருக்கையில், ''விசுவாசம்'' என்பது விசுவாசிக்கின்ற ஒருவரின் இதயத்தில் என்ன உள்ளது என்பதை அடையாளப்படுத்தும் பெயர்ச் சொல்லாக உள்ளது என்பதே இவையிரண் டிற்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசமாகும். (பின்வரும் வரைபடத்தைக் காணவும்.)

### வரைபடம் 1

| | |
|---|---|
| "ஞானஸ்நானப்படுத்து"<br>"ஞானஸ்நானம்" | 77 முறைகள் |
| "அறிக்கையிடு"<br>"அறிக்கை" | 32 முறைகள் |
| "மனந்திரும்பு"<br>"மனந்திரும்புதல்" | 56 முறைகள் |
| "விசுவாசி" (வினைச் சொல்)<br>"விசுவாசம்" | 483 முறைகள் |

### வார்த்தைகள் வரும் இடங்கள் - ஆய்வுக் கருத்து

"நம்புதல்" (வினைச் சொல்) என்ற சொற்றொடரானது வேதாகமத்தின் மற்ற கருத்துக்களுடன் பின்வரும் எண்ணிக்கையிலான முறைகள் வருகின்றது: இரட்சிப்பு - ஆறுமுறைகள், நித்திய ஜீவன் - ஏழு, புதுப் பிறப்பு - இரண்டு, நீதியைப் பெறுதல் - மூன்று, நீதிமானாக்கப்படுதல் - ஒன்று, மற்றும் பாவமன்னிப்பு - ஒன்று.

“விசுவாசம்” என்பது மற்ற கருத்துக்களுடன் தொடர்புடைய வகையில் பின்வரும் எண்ணிக்கையிலான முறைகள் வருகின்றது: நீதி - ஏழு, நீதியைப் பெறுதல் - எட்டு,[2] இரட்சிப்பு - இரண்டு, மற்றும் மன்னிப்பு - ஒன்று.

இயேசுவில் நம்பிக்கை கொண்டுள்ள பெரும்பான்மையோர், இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்புக்கு முன்னதாக இயேசுவில் நம்பிக்கை, மனந்திரும்புதல், மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றைத் தேவன் கேட்கின்றார் என்பதை ஒப்புக் கொள்கின்றனர். இவைகள் கேட்கப் படுகின்றன என்று ஏற்றுக் கொள்வது, இந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதன் தொடர்பாக வேதாகமத்தில் இவை குறிப்பிடப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. (வரைபடத்தைக் ப.16ல் காணவும்.) ஞானஸ்நானம் என்பது மனந்திரும்புதல் அல்லது அறிக்கையிடுதல் என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்த வரல்லாதவரின் மன்னிப்பு மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றுடன் அதிக முறைகளும், “நம்பிக்கை” அல்லது “விசுவாசம்” என்பதுடன் ஏறக்குறையச் சமமான முறைகளும் இணைக்கப்பட்டுள்ளதைப் பலர் புரிந்து கொள்ளுவதில்லை.

‘‘அறிக்கையிடு’’ என்பது இருமுறை மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது, இவ்விரு முறைகளிலும் இது கிறிஸ்தவரல்லாதவர் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளத் தேவையான ஒன்று என்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10:9, 10).

தீமோத்தேயுவின் “நல்ல அறிக்கை” என்பது, அவர் கிறிஸ்தவரான பொழுது செய்ததாகவே இருக்கும் (1 தீமோ. 6:12). யோவானின் ஞானஸ் நானத்தை நாடியவர்கள் தங்களின் பாவங்களை அறிக்கையிட்டனர் (மத். 3:6; மாற். 1:5). மனிதர் முன்பாக இயேசுவை அறிக்கையிடுகின்றவர்களைப் பிதாவின் முன்பு தாம் அறிக்கை பண்ணுவதாக இயேசு கூறினார் (மத். 10:32; லூக் 12:8). அவர் ஒருவேளை, கிறிஸ்தவராகும் போது ஒருவர் செய்கின்ற தொடக்க அறிக்கையைக் குறிப்பிட்டிருக்கலாம், ஆனால் துன்பங்களை எதிர்கொள்ளுகையில் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை எடுத்துரைத் தல்களும் இதில் உள்ளடக்கப்படலாம்.[3] பாவங்கள் மன்னிக்கப்படும் படியாகக் கிறிஸ்தவர்கள் அவைகளை அறிக்கையிடுதல் அவசியம் என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிட்டார் (1 யோவா. 1:9).

இயேசுவின் மரணத்தினால் புதிய உடன்படிக்கை அர்ப்பணிக்கப்பட்ட பிறகு, மன்னிப்புக்கு அவசியமானது என்ற வகையில் “மனந்திரும்புதல்” என்பது மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

> எழுதியிருக்கிறபடி ... மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம்

> தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது … என்றார் [இயேசு] (லூக். 24:46-47).
>
> பேதுரு அவர்களை [யூதர்களை] நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38) என்றார்.
>
> உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் (அப். 3:20).

*மனந்திரும்புதல் என்பது ஒருக்காலும் புதிய பிறப்பு, இரட்சிப்பு, நீதிமானாக்கப்படுதல் அல்லது நீதி ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு கலந்துரையாடுவதில்லை. அது ஞானஸ்நானத்துடன் இணைவுற்ற வகையில் யோவானால் கேட்டுக்கொள்ளப்பட்டது (மத். 3:8; லூக். 3:8) மற்றும் சில வேளைகளில் அது பாவமன்னிப்புக்குக் கேட்டுக் கொள்ளப்பட்டது (மத். 3:11; மாற். 1:4; லூக். 3:3; அப். 13:24; 19:4). தேவனுடைய இராஜ்யம் அருகாமையில் இருந்ததால் யோவானும் இயேசுவும் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தனர் (மத். 3:2; 4:17; மாற். 1:15). அப்போஸ்தலர்கள் இயேசுவால் முதன்முறை அனுப்பப்பட்ட பொழுது மனந்திரும்புதலைப் பிரசங்கித்தனர் (மாற். 6:12). பாவிகளை மனந்திரும்புகிறதற்கு அழைக்கவே தாம் வந்ததாக இயேசு கூறினார் (லூக். 5:32) மற்றும் மனந்திரும்புகின்ற பாவியினிமித்தம் பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் என்றும் அவர் கூறினார் (லூக். 15:7). மக்கள் மனந்திரும்பும்படிப் பவுல் உற்சாகப்படுத்தினார் (அப். 17:30; 20:21; 26:20). புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்கள் மனந்திரும்புதல் என்பது தேவனால் விரும்பப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 5:31; 11:18; ரோமர் 2:4; எபி. 6:1; 2 பேது. 3:9). கிறிஸ்தவர்கள் ஆகியுள்ளவர்களிடத்திலும் இது அவசியம் இருக்க வேண்டும் என்ற வகையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 17:4; அப். 8:22; 2 கொரி. 7:9, 10; எபி. 6:6; வெளி. 2:5, 16, 21, 22; 3:3, 19).*

*இரட்சிப்படைய நாம் வசனமாகிய சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் என்று இயேசு இருமுறை கூறினார் (லூக். 8:12; மாற். 16:16). இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டும் என்று பவுல் நான்கு முறை போதித்தார் என்று நாம் காண்கின்றோம் (அப். 16:31; ரோமர் 1:16; 10:9; 1 கொரி. 1:21). மறுபடியும் பிறத்தல் என்பது விசுவாசத்துடன் சேர்த்து இரு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா. 1:12, 13; 1 யோவா. 5:1). நித்திய ஜீவன் விசுவாசத்துடன் ஏழுமுறை இணைக்கப்பட்டுள்ளது (யோவா. 3:15, 16, 36; 6:47; 11:26; 20:31; 1 தீமோ. 1:16). பாவமன்னிப்புப் பெறுவதற்கு அவசியமானது என்ன என்று எடுத்துரைப்பதில் “விசுவாசி” என்பது ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 10:43); மற்றும் அது “நீதிமானாக்கப்படுதல்,” “விடுவிக்கப்படுதல்” அல்லது “நீதி” (அப். 13:39; ரோமர் 10:4, 10; கலா. 2:16) என்று மொழிபெயர்க்கப்பட்ட dikaios (அல்லது*

## வரைபடம் 2

ஆய்வுக் கருத்துக்கள்

| சொற்றொடர்கள் (வார்த்தைவடிவங்கள் உட்பட) | இரட்சிப்பு | மன்னிப்பு | புதிய வாழ்வு | நித்திய வாழ்வு | நீதிமானாக்கப் படுதல்/நீதி |
|---|---|---|---|---|---|
| "அறிக்கையிடு" | *2* | *0* | *0* | *0* | *0* |
| "மனந்திரும்பு" | *0* | *3* | *0* | *0* | *0* |
| "விசுவாசி" | *6* | *1* | *2* | *7* | *4* |
| "விசுவாசம்" கொள் | *2* | *1* | *0* | *0* | *15* |
| "ஞானஸ்நானம்" பெறு | *2* | *3* | *2* | *0* | *0* |

அதன் கிரேக்க வடிவங்களின் தொடர்பு வார்த்தை வடிவங்களில் ஒன்றுடன்) என்ற வார்த்தையுடன் நான்கு முறை இணைக்கப்பட்டுள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசத்தின் அவசியம் இருமுறை குறிப்பிடப் பட்டுள்ளது (எபே. 2:8; 1 பேது. 1:9), மற்றும் இருதயத்தைச் சுத்திகரித்தல் பற்றி நாம் ஒருமுறை வாசிக்கின்றோம் (அப். 15:9). நீதி மற்றும் நீதிமானாக்கப்படுதல் (இரு வார்த்தைகளுமே dikaios அல்லது அதன் தொடர்புடைய கிரேக்க வார்த்தை வடிவங்களில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன) என்பவை விசுவாசத்துடன் பதினைந்து முறை இணைவு படுத்தப்பட்டுள்ளன (ரோமர் 3:22, 26, 28, 30; 4:5, 13-16; 5:1; 9:30; கலா. 2:16; 3:8, 24; பிலி. 3:9; எபி. 11:7; யாக். 2:24) மற்றும் இவை ஆபகூக் 2:4ல் இருந்து மேற்கோள்களாகப் புதிய ஏற்பாட்டில் மூன்று முறை வருகின்றன.

ஞானஸ்நானமானது இரு வசனங்களில் இரட்சிப்புடன் இணைவு படுத்தப்பட்டுள்ளது (மாற். 16:16; 1 பேது. 3:21), இது மன்னிப்பு மற்றும் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப்படுதல் ஆகியவற்றுடன் மும்முறை இணைவு படுத்தப்பட்டுள்ளது (அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13; மற்றும் எபே. 5:26ஐயும் காணவும்), மற்றும் இது புதிய வாழ்வுடன் இருமுறை இணைவு படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 6:4; கொலோ. 2:12, 13), மற்றும், ஞானஸ்நானத்தின் மறைமுகக் குறிப்பிடுதலான தண்ணீரை இயேசு புதிய பிறப்புடன் இணைவித்தார் (யோவா. 3:3-5; தீத்து 3:5ஐயும் காணவும்).

ஞானஸ்நானமானது, அறிக்கையிடுதல் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றுடன் இணைவிக்கப்பட்டுள்ளதை விட அதிகமான முறைகள் இரட்சிப்பு, மன்னிப்பு மற்றும் புதிய வாழ்வு ஆகியவற்றுடன் அடிக்கடி அல்லது மிகவும் அடிக்கடி இணைவிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. ஆகையால், இரட்சிப்புக்கு அறிக்கையிடுதலும் மனந்திரும்புதலும் அவசியம் என்று ஏற்றுக் கொள்பவர்கள் ஞானஸ்நானத்தையும் அவசியமானதாகக் கண்ணோக்க வேண்டும். "Baptize" என்ற வார்த்தையின் வடிவங்கள் ‘‘நம்பிக்கை’’ அல்லது ‘‘விசுவாசம்’’ என்ற வார்த்தைகளுடன் இணைவிக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் மன்னிப்பு மற்றும் புதிய வாழ்வு என்பவற்றுடன் மிகவும் அடிக்கடி இணைவிக்கப்பட்டுள்ளன.

## சொற்றொடர்கள் ஒன்றுகூடித் தோன்றும் இடங்கள்

தேவைப்படும் பலவித பதில்செயல்கள் ஒன்றாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில், யோவானின் “ஞானஸ்நானத்துடன்” தொடர்புடைய வகையில் “அறிக்கையிடும்”படி மக்களுக்கு அறிவிக்கப் பட்டது (மாற். 1:5). பவுல், “விசுவாசித்தால்” என்ற வினைச் சொல்லுடன் “அறிக்கையிடுதலை” இருமுறை பயன்படுத்தினார் (ரோமர் 10:9, 10), மற்றும் பிலிப்பு, புதிய உடன்படிக்கையின் ‘‘ஞானஸ்நானத்துடன்’’ “அறிக்கையிடுதலை” ஒருமுறை குறிப்பிட்டார், இவ்வசனப் பகுதிக்குப் பலத்த கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் இல்லாதிருக்கலாம் (அப். 8:37). “அறிக்கையிடுதல்” என்பது “மனந்திரும்புதல்” என்பதுடன் இணைந்து வருவதில்லை.

“மனந்திரும்பு” என்பது “விசுவாசியுங்கள்” என்பதுடன் இணைந்து ஒரு முறை வருகின்றது (மாற். 1:15), இது “விசுவாசம்” என்பதுடன் ஒருமுறையும் (அப். 20:21), யோவானின் ‘‘ஞானஸ்நானத்துடன்’’ தொடர்புடைய வகையில் நான்கு முறைகளும் (மாற். 1:4; லூக். 3:3; அப். 13:24; 19:4) மற்றும் புது உடன்படிக்கையின் ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய வகையில் ஒரு முறையும் (அப். 2:38) வருகின்றது.

‘‘விசுவாசி’’ என்ற வார்த்தை யோவானின் ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய வகையில், வரப் போகிற கிறிஸ்துவை எதிர்பார்த்திருக்கும் நிகழ்வில் ஒருமுறை வருகின்றது (அப். 19:4). இது புது உடன்படிக்கை ஞானஸ்நானத்தின் நேரடிக் கூற்றுக்களுடன் இணைந்து நான்கு முறை வருகின்றது (மாற். 16:16; அப். 8: 12, 13; 18:8). (இது இரு முறை மறைவான கருத்தாக வருகின்றது [அப். 2:38, 44; 16:33, 34.]) இது இன்னும் ஒருமுறை வருகின்றது (அப். 8:37) ஆனால் இதன் கையெழுத்துப் பிரதி கேள்விக்குட்பட்டதாக உள்ளது. “விசுவாசம்” என்பது ஞானஸ்நானத்துடன் இருமுறை வருகின்றது (கலா. 3:26, 27; கொலோ. 2:12).

வேதாகமச் சொற்றொடர்களின் மேற்கண்ட ஒப்பீடானது, “நம்பிக்கை” மற்றும் “விசுவாசம்” என்ற வார்த்தைகள் ஞானஸ்நானத்துடன் இணைந்து மிகவும் அடிக்கடியும், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுடன் மிகக் குறைவான முறைகள் இணைந்து வருவதை வெளிப்படுத்துகின்றது.

## தொகுப்புரை

புதிய ஏற்பாட்டில் “ஞானஸ்நானம்” என்ற வார்த்தை அடிக்கடி வருவது மட்டுமின்றி, ஞானஸ்நானம் என்ற கருத்து தேவனிடத்தில் தொடக்கம் பெற்றதாகவும், இயேசுவால் போதிக்கப்பட்டதாகவும் உள்ளது.

ஞானஸ்நானம் என்பது புதிய ஏற்பாட்டில் சிறிய பாடம் அல்ல என்று மட்டுமே ஒருவர் முடிவு செய்ய இயலும். முக்கியமானவை என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் பிற தேவைக் கருத்துக்களை விட இது மிகவும் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. புதிய ஏற்பாட்டைப் பற்றிய ஒரு சுருக்கமான படிப்புக் கூட, ஞானஸ்நானம் என்பது இயேசுவால் போதிக்கப் பட்டதையும், மீண்டும் மீண்டும் அது வருவதையும் உறுதிப்படுத்துகின்றது.

---

குறிப்புகள்

[1]Henry Wansbrough, gen. ed., The New Jerusalem Bible (New York: Doubleday, 1985), 1875, n6a. [2]இது ஆபகூக் 2:4ல் இருந்து புதிய ஏற்பாட்டில் வருகின்ற மேற்கோள்களின் மூன்று எண்ணிக்கைகளை (ரோமர் 1:17; கலா. 3:11; எபி. 10:38) உள்ளடக்குவ தில்லை. இவ்விடங்களில், நீதிமான்கள் விசுவாசத்தினால் வாழ்வார்கள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது. [3]மனிதர் முன்பாக அவரை மறுதலித்தல் என்பது துன்பத்திலிருந்து தப்பிப்பதற்காக அவரை மறுதலித்தல் என்று அர்த்தப்படுவதாய் இருக்க வேண்டும் (மத். 10:33; லூக். 12:9 ஆகியவற்றைக் காணவும்.)